சுருக்கம்

பள்ளிக் கல்வி– 2007–08 மற்றும் 2008–09–ஆம் கல்வி ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 710 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.07.2014 முதல் 30.06.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் [பக5(1)]துறை.

அரசாணை (1டி) எண். 279 நாள்: 30.12.2014

( திருவள்ளுவராண்டு 2045, மார்கழி 15)

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை(நிலை)எண்.106, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 09.5.2007
2. அரசாணை(நிலை)எண்.176, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 20.7.2007.
3. அரசாணை(நிலை)எண்.101, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 15.5.2008.
4. அரசாணை (1டி) எண்.239, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 29.08.2011
5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.047066/ எல்/இ3/2014, நாள் 16.07.2014.

------

ஆணை:

மேலே 1 முதல் 3 வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, 2007–08 மற்றும் 2008–09 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட தற்காலிக பணியிடங்களான 210 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 500 முதுநிலை பட்டதாரி ஆசிரியர் ஆகிய 710 பணியிடங்களுக்கு, கடைசியாக மேலே 4–ல் படிக்கப்பட்ட அரசாணையில் 01.07.2011 முதல் 30.6.2014 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே 5–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், 210 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 500 முதுகலை ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்கள் சேர்த்து மொத்தம் 710 தற்காலிகப் பணியிடங்கள் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600 எனவும், முதுகலை ஆசிரியர் பணியிடத்திற்கு ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும், இப்பணியிடங்களுக்கு 01.7.2014 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, 2007–08 மற்றும் 2008–09ஆம் கல்வியாண்டில் நிலை உயர்த்தப்பட்ட அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 210 தற்காலிக பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (ஊதிய விகிதம் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600) மற்றும் 500 தற்காலிக முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (ஊதிய விகிதம் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800) ஆக மொத்தம் 710 தற்காலிக ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.07.2014 முதல் 30.06.2015 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தொடர்நீட்டிப்பு குறித்த நிதித்துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை, இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:-</u>

2202–பொதுக்கல்வி–02 – இடைநிலைக்கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I - திட்டத்தில் சேராதது– AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்– 01 – சம்பளங்கள்.
(த.தொ.கு 2202–02–109 AA –0108).

<u>நகராட்சி/ மாநகராட்சி பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:-</u>

"2202–பொதுக்கல்வி – 02 – இடைநிலைக்கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – 1 திட்டத்தில் சேராதது – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி, இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 சம்பளங்கள்.
(த.தொ.கு.2202–02–109–AB-0106)"

5. மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி அனுமதிக்கப்படும் ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் இதரப் படிகளையும் பெறத் தகுதி உடையவர்களாவார்கள்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.65974/கல்வி–II/2014, நாள் : 24.12.2014 –ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த.சபிதா**
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர் , சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்டக் கருவூல/சார் கருவூல அலுவலர்கள்.
<u>நகல்:</u>
நிதித் (கல்வி–II) துறை, சென்னை–9.
பள்ளிகல்வி (அநமு) துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ந.க.எண் 047066/எஸ்/இ3/2014 நாள் 31.12.2014.
நகல் - அனுப்பப்படுகிறது

30/12/14
பிரிவு அலுவலர்

Director of School Education
Chennai - 600 006.
31/12/14